மலர் 6] [இதழ் 20
1—5—65
விசுவாவசு ஆடு சித்திரை 19
✽
"தமிழகம்" கிழமை இதழ்.
விலை - 10 காசுகள்

தமிழகம்

சிறப்பாசிரியர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்

அப்பர் விருந்து

அல்லல் இல்லை

துன்பத்தின் சுமையைத் தாங்கொணுமல் அவதியுறும் ஏ மனிதா! துன்பம் நீங்கித் தூய பேரின்ப வாழ்வில் திளைக்க வேண்டுமென்று விரும்புகிருயா? அப்படியானல், இன்பத்தைத் தேடி நீ எங்கும் அலைய வேண்டாம்.

இங்கே வா! உன்னிடத்தே உறைகின்ற பொய்மையையும் புல்லிய மாயைகளையும் புறத்தே ஒதுக்கு! புறப்படு திருக்கச்சி நகர் நோக்கி! உமை தழுவக் குழைந்த அழகன் ஏகாம்பர நாதன் அங்கு வாலறிவினனுக—வெண்மழுவேந்திய கையனுக எழுந்தருளிக் காட்சி தருகின்ருன். அவனது தண்ணர் திருவடிகளைத் தூய அன்போடு—காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் தொழுதேத்து! அல்லல் அகலும்; ஆராத இன்பப் பெருவெள்ளம் பெருக்கெடுத்துப் பாயும்.

இதனை அப்பரடிகள் விளக்குவதைப் பாருங்கள்:

"பொய்ய னைத்தையும் விட்டவர் புந்தியுள்
மெய்ய னைச்சுடர் வெண்மழு வேந்திய
கைய னைக்கச்சி ஏகம்ப மேவிய
ஐய னைத்தொழு வார்க்கில்லை அல்லலே!

—அப்பர்

குடியாட்சி வளர்ந்த வரலாறு:

பண்டைய குடியாட்சி முறைகள்

பேராசிரியர் பா. சூரியநாராயணன்

ரோம் நகரரசில் முடியாட்சி நீங்கிக் குடியரசு நிறுவப்பட்ட காலத்தில், அங்கு இருந்த இரு சமுதாய வகுப்புக்களைப் பற்றியும், அவற்றின் உரிமைகளைப் பற்றியும் முன்பு நாம் பார்த்தோம். அரசர் செர்வியஸ் டல்லியஸ் செய்த சீர்திருத்தங்களினுல், பிளபியருக்கு எல்லாக் குடி உரிமைகளும் கிடைக்காவிட்டாலும், பொதுவாழ்வு உரிமைகள் இரண்டு கிடைத்தன; படையில் சேரவும், புதிய சட்டமன்றத்தில் வாக்கு அளிக்கவும் அவர்களுக்கு உரிமைகள் கிடைத்தன. இதைக்காணும் போது, குடியாட்சியின் வளர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படும் நிலைமைகள் பலவற்றுள் ஒன்று, மிகச் சிறிய அளவில் ரோம் நகரத்தில் முடியாட்சிக் காலத்தில் அரசர் செர்வியஸ் டல்லியசினுல் நிறைவேற்றி வைக்கப்பட்டது என்று தெரிகிறது.

முடியாட்சி மறைந்து குடியரசு நிறுவப்பட்டாலும், ரோம் குடியாட்சியாக இல்லாமல், பிரபுக்களாட்சி நிறுவப் பெற்ற குடியரசாகத் (Repu-Blican aristocracy) தொடக்கத்தில் இருந்தது. அரசியல், சட்டஇயல், பொருளியல், சமயம், சமுதாயம் முதலிய எல்லாத் துறைகளிலும் எல்லா உரிமைகளும் பட்ரிஷியக் குடிகளுக்கே இருக்கவும் பிளபியருக்கு இவ்வுரிமைகள் இல்லாமற்போகவும், இவ்விரு வகுப்பாருக்குமிடையே, உரிமையைப் பொறுத்தமட்டில் சமத்துவநிலை ஏற்பட்டால்தான் குடியரசு குடியாட்சியாக மாறக்கூடியதாக இருந்தது. எனவே பிளபியர் கி. மு. 494 முதல் கி. மு. 287 வரை மேற்குறித்த துறைகளிலெல்லாம் பட்ரிஷியரை ஒத்த உரிமைகளைப் பெறுவதற்காகக் கிளர்ச்சி செய்து, வெற்றி பெற்றுப் படிப்படியாக உரிமைகளைப் பெற்றுக் குடிமக்கள் என்ற முழுநிலைக்கு உயர்ந்தனர். எனவே ரோம் நகரரசில் குடியரசுக் காலத்தில் குடியாட்சி வளர்ந்த பல்வேறு நிலைகளை நாம் காண வேண்டுமானுல், பிளபியர் நடத்திய உரிமைக்கிளர்ச்சியைப்பற்றி நாம் கூறவேண்டும்.

பிளபியருக்கு இருந்த குறைகளே இவ்வுரிமை இயக்கத்துக்கு அடிப்படைக் காரணங்களாக இருந்தன. முடியாட்சிக் காலத்திலிருந்த அரசியலமைப்பு, அரசன் நீங்கலாக, மற்ற எல்லா வகையிலும் குடியரசுக் காலத்தின் தொடக்கத்திலும் தொடர்ந்து இருந்து வந்தது. எனவே, அரசன் நீங்கலாக, மற்ற அலுவலர், மன்றங்கள் ஆகியவற்றின் அமைப்பையும் அலுவல்களையும், அவை குடியரசுக் காலத்தின் தொடக்கத்தில் இருந்த நிலையில் நாம் காணுவோமானுல், அவற்றில் எவ்வளவு குறைவாக பிளபியருக்குப் பங்கு இருந்ததென்று நமக்குத் தெரியவரும்.

1) ஆட்சி அமைப்பில் இருந்த குறைகள்:

குடியரசின் உயர்தர அலுவல்களாக இருந்த கான்சல்கள் (consuls) என்ற அலுவல்களைப் பெறுவதற்கு பிளபியருக்குத் [illegible], இவ்வரசியலுரிமை முழுக் குடிமக்களாகக் கருதப்பட்ட பட்ரிஷியருக்கே இருந்தது. கி. மு. 510ல் முடியாட்சி நீங்கினலும், அரசரால் [illegible] யாளப்பட்ட மூவகை அதிகாரங்களும், அலுவல்களும் தொடர்ந்து இருந்தன; அரசருடைய உயர்தர நீதி அதிகாரமும், உயர்தர இராணுவ அதிகாரமும் "இம்பீரியம்" (imperiam) எனக் குறிப்பிடப்பட்டன; எனவே, இவ்வதிகாரங்களையும், அலுவல்களையும் ரோமானியர், தங்களால் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட கான்சல்கள் (consuls) என்ற இரு உயர்தர அதிகாரிகளுக்கு அளித்தனர்; இவ்வாறு அவர்கள் செய்யும் போது, எந்த ஒரு அதிகாரியும் வரம்பற்ற உயர்தர அதிகாரத்தைக் கைப்பற்றிச் சருவாதிகாரியாக மாறிவிடாதபடி, அரசியலமைப்பை ஆக்கிக்கொண்டனர். (கான்சல்களுடைய உயர்தர அதிகாரங்களுக்கு ரோமானியர் ஏற்படுத்திய வரம்புகளைப் பற்றி விவரமாகப் பின்னர் நாம், ரோமானியர் உலகத்துக்கு அளித்துச் சென்ற அரசியற் கருத்துக்களையும், ஆட்சி நிறுவன அமைப்பு விதிகளையும் பற்றிக் குறிப்பிடும்போது கூறுவோம். கான்சல்கள்

(7-ஆம் பக்கம் பார்க்க)

மண்ணும் விண்ணும்!

— தவத்திரு அடிகளார் அவர்கள் —

[திருச்சி தேவர் மன்றத்தில "மண்ணும் விண்ணும்" என்ற தலைப்பில் தவத்திரு அடிகளார் அவர்கள் ஆற்றிய தொடாசொற்பொழிவின் முன் தொடாச்சி]

இறைவன் உயிர்களுக்கு வழங்கும் கருணைக்கு திருஅருள் என்று பெயர். அருள் என்பதற்குத் திருவள்ளுவர் கூறும் பொருள், யாமாட்டும் எந்தவிதப் பற்றுக்கோடும் இன்றி—எந்தவிதமான குறிக்கோளும் இன்றி—எந்தவிதமான வேறுபாடுகளையும் உள்ளடக்காமல் அன்பு செய்வது என்பதுதான். அது, மனித உலகிற்கும் உண்டு என்று திருவள்ளுவர் சொன்னார். ஆனாலும் தமிழக வழக்கிலே மனிதனுக்கு அவ்வருள் இல்லை போலத் தோன்றுகிறது. அதனாலேயே திருவருள் என்றால் அது இறைவனுக்குத்தான் உரியது என்ற முடிவிற்கு வந்துவிட்டோம். மனிதன் தன்னைச் சார்ந்தவர்களைத் தவிர மற்றவர்களை—மாற்றார்களை நேசிப்பதில் வளர்ச்சியடையவில்லை. தன்னுடைய சாதி, தன்னுடைய மொழி, தன்னுடைய இனம், தன்னுடைய மதம் இவற்றைச் சார்ந்த எல்லைக்குள்ளாக அன்பு செலுத்துவதிலேயே அவன் இன்னும் வெற்றிபெறவில்லையே! அப்படியிருக்க இவற்றைககடந்து அவன் எப்படி நேசிப்பது? இந்த நாட்டில் சகோதரப் பற்றுவது வளர்ந்திருக்கிறதா என்றால் இல்லவே இல்லை. இராமனைப் பார்த்தாயா? இலக்குவனைப் பார்த்தாயா? பரதனைப் பார்த்தாயா? எவ்வளவு சகோதரப் பாசம் என்று கேட்டால், அதெல்லாம் இலக்கியத்தில் ஏதேதோ சொல்லி விட்டுப் போய்விட்டார்கள்? நடைமுறைக்கு ஒத்துவருமா? என்று கேட்பார்கள். நமக்குள் மனிதனை மனிதன் நேசிக்கத் தெரியாமையாலே, இந்த அருட் கருணை ஒன்றுக்கே அருள் என்று பெயர் வந்தது

"நின்றன் வார்கழற்கு
அன்பெனக்கு நிரந்தரமாய்
அருளாய்" என்கிறார்.

மாணிக்கவாசகப் பெருமான். இறைவன் விருப்பு வெறுப்பின்றி அருள் சுரக்கும் அருளாளன். அவனைப் பித்தன் என்று சொல்லுவார்கள். இப்பொழுது, மூளைக்கோளாறு உடையவனைப் பைத்தியம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மிக அற்புதமான பொருளுடைய ஒரு சொல்லை இப்பொழுது இத்தகைய பொருளில் கையாளுகிறார்கள். சுந்தரர் இறைவனைப் பார்த்துச் சொன்ன சொல் பித்தன் என்பது. இறைவனையும் பித்தன் என்று சொல்லிவிட்டு, மூளைக்கோளாறுடையவனையும் பித்தன் என்று சொன்னால் இதில் ஏதாவது புத்திசாலித்தனம் இருக்கிறதா? இப்பொழுது, இறைவனைப் போன்ற பித்தர்கள் நாட்டில் இருந்தால் நாட்டுக்குப் பெரிதும் நன்மையாக இருக்கும்.

இறைவனைப் பார்த்துச் சுந்தரர். பித்தா என்று கூறியதற்குக் காரணம் என்ன? இறைவன் படைத்தும் காத்தும் கரந்தும் உயிர் வர்க்கத்தை வளர்க்கின்றான்—வாழ்விக்கின்றான். அந்த விளையாட்டின் உள்நோக்கம் என்ன? அவனுக்கு ஏதாவது தன்னலக் குறிக்கோள் இருக்கிறதா? தன்னலச் சார்பு இருக்கிறதா இல்லை. ஒன்றுமே இல்லாமல் பற்றற்ற நிலையில் அவன் அந்த விளையாட்டை நடத்திக் கொண்டிருக்கிறான்.

வீட்டில் சாதாரணமாக ஒரு தாய் தன் மகனைப் பார்த்து, 'டேய் சமர்த்தாய் இருடா—பைத்தியக்காரத்தனமாய் சம்பாதித்துக் கொள்ளாமல் இருக்கிறாயே! என்பாள். பைத்தியக்காரத்தனமாக, என்று சொல்லுகிறாள். சுந்தரர் சிவபெருமானைப் பார்த்துப் 'பித்தா' என்று கூறியது இந்தப் பொருளிலன்று அவர் மிக உயர்ந்த பொருளில் பேசுகின்றார். மனிதர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பதையே முக்காலே மூன்று வீசம் பேர் எதைச் செய்தாலும் பெரும்பாலும் தன்னலக் குறிக்கோளுடனேயே செய்வதைப் பார்க்கிறோம். குறிக்கோள் உயர்ந்ததாக பிறர் நலம் பேணுவதாக இருந்தால் நல்லது. அந்த உயர்ந்த குறிக்கோளுக்கு இலட்சியம் என்று பெயர். சுந்தரர் இறைவனைப் பார்த்துப் பாடிய போது, அவன் இந்த உலக உயிர்களைப் பேணுதலுக்கும் பாதுகாத்தலுக்கும் இந்த உயிர்களுக்குத் தண்ணருட்கருணை பொழிதலுக்கும் எந்த விதமான தன்

(6ஆம் பக்கம் பார்க்க)



தமிழகம்

அன்பாலே மக்கள்குலம் இணைந்து வாழும்
அருள்நெறியைப் பரப்புதலே எங்கள் நோக்கம்

மலர் 6] 1—5—65 [இதழ் 20

உறுதி கொள்வோம்!

நாமிருக்கும் நாடு நமது நாடு. காலம் கடந்த புகழ்படைத்த நாடு. வீரத்தின் விளைநிலம். இந்த நாட்டு மக்கள் ஆங்கிலப் பேரரசையே எதிர்த்துப் போராடி சுதந்திரம் பெற்றவர்கள். இத்தகு வீர பாரம்பரியம் உடைய நம் நாட்டின் மீது பாகிஸ்தான் படையெடுக்கிறது. சீனு தாக்குகிறது. நெருப்போடு விளையாடுகிறார்கள். சுட்டெரிக்கும் என்பதை மறந்து விட்டார்கள் போலும்! புத்தரின் கருணையும் அப்பரடிகளின் அருள் நிறை ஆற்றலும், கண்ணகியின் கற்பின் ஆற்றலும், போர் உணர்ச்சியுடைய அரசர்களுக்கு அறைகூவல் விடுத்த நாடு இது. இந்த நாட்டின் மக்கள், தங்கள் புனிதமான நாட்டின் எல்லையில் அந்நியனுடைய ஆக்கிரமிப்பு எண்ணத்துடன் அடி வைக்க ஒருபோழுதும் ஒருப்பட மாட்டார்கள். உலகம் நம்முடைய நாட்டின் நியாய, நீதி உணர்ச்சியைக் கருதி, நம் பக்கலில் நின்று போராடும்! வெற்றி நமதே!

எல்லையில் அந்நியர்கள் தொல்லை தருகின்றபோது, உள்நாட்டில் ஒருமைப்பாடும் அமைதியும் அவசியமாகும். நம்மிடையே ஆயிரம் பேதங்கள் இருக்கலாம். ஆனாலும், பேதங்களைப் பெரிதுபடுத்தி ஒருமைப்பாட்டுக்கு உலைவைக்கக் கூடாது. சுதந்திரப் போராட்டக் காலத்தில் தியாகம் செய்வதற்கு வாய்ப்பில்லாமற் போனவர்கள் இந்தத் தருணத்தில் தியாகம் செய்ய முன்வரவேண்டும்! தனிமனித வாழ்க்கையின் எந்த நலனையும்விட இன்றையச் சூழலில் நாட்டின் நலனே பெரிது. அதனை முன்னிறுத்தி நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும். இமயமலை முதல் குமரிமுனை வரை வாழ்கின்ற இந்நாட்டு மக்கள் அனைவரும் சாதி, சமய, மொழி, இன, அரசியல் ஆகிய எல்லா வேற்றுமைகளையும் அறவே மறந்து, ஒன்றுபட வேண்டும். நம்பியரும் நங்கையரும் செருகளம் நோக்கி விரையவும் தங்களைத் தயார்செய்து கொள்ள வேண்டும். உழவர்களும், தொழிலாளர்களும் நிறையப் பொருள்களை உற்பத்திசெய்து குவிக்கவேண்டும். ஆலயங்களிலெல்லாம் இந்த நாடு வெற்றி வாகை சூட வேண்டும் என்று பிரார்த்திக்கப் பெறவேண்டும். எந்த விலை கொடுத்தேனும் இந்த நாட்டின் எல்லையையும் சுதந்திரத்தையும் காப்பாற்ற உறுதிகொள்வோமாக!

— அடிகளார்.

குறட்செல்வம்

பயனில சொல்லாமை

இன்றைய உலகியலில் பேச்சு அதிகம். மனிதர்கள் தம்முள் ஒரு சிலர் கூடினாலும் பேசித் தீர்க்கிறார்கள். பலர் கூடினாலும் (கூட்டங்கள் என்ற பெயரில்) பேசித் தீர்க்கிறார்கள். ஆக, கடந்த நூற்றாண்டை விட இந்த நூற்றாண்டில் பேச்சு அதிகம். வீட்டிலும் அதிகம். நாட்டிலும் அதிகம். இங்ஙனம் வளர்ந்து வரும் பேச்சு முறை ஆக்க வழிப் பட்டதாக-பெரும் பயன் தரத் தக்கதாக வளருமானால் அது பாராட்டுக்குரியதாகும். மனிதனிடத்தில் சொல்லாட்சி தோன்றியதே, பொருளை உணர்த்துதற்குத்தான்! பொருள் வழிப் பயன் பெறுதலும், தருதலுமே சொல்லாட்சியின் இறுதி இலட்சியம். மேலும், உ[illegible] [illegible] பொருட்பயனுடையதாகக் [illegible] வளர்த்துக் [illegible] சொல்லாட்சி. மனிதர் [illegible]ன்ற பகை, பிளவு [illegible] பெரும்பாலும் கார[illegible] [illegible]ல்லாதோர், சொற்[illegible] [illegible]ல்லாத முறையில் [illegible]தாகும். இயற்கை [illegible]யில் பல்வேறு தடைகளைக் கடந்து மனிதனின் வளர் வழிப்பட்ட முயற்சியால் தோன்றும் சொற்கள் பயனற்றவைகளாகப் போவதைப் பார்த்துத் திருவள்ளுவர் வருந்துகிறார். சொல்லாட்சியும் உழைப்பின் விளைவே! இத்தகு மேம்பட்ட சொல்லாட்சி பெரும்பான்மையான மக்கள் வாழ்வில் அவர்கட்கும் பிறருக்கும் பயனில்லாமலே அழிவதைப் பார்த்துக் கழிவிரக்கம் கொள்கிறார் திருவள்ளுவர்.

பயனற்ற சொற்களைப் பேசிப் பொழுது போக்கும் புல்லிய மாந்தரை இளங்கோவடிகள் 'வறுமொழியாளர்' என்று ஏசுகின்றார் திருவள்ளுவர் பயனற்ற சொற்களைக் கேட்டு மகிழ்வோரையும் கண்டிக்கின்றார்.

**''பயனில்சொல் பாராட்டு
வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல்''**

என்று கூறுகிறார். நெல்லோடுதான் பதரும் சேர்ந்திருக்கிறது. அதனாலேயே, அதுவும் நெல்லாகி விடுமா என்ன? பயன்படுத்துவோர் விழித்தெழும் வரையில் பதரும் நெல்லோடு சேர்ந்திருக்கும். பின்னர், பதர் தூற்றப்பெறும்; நெல்லினின்றும் பிரிக்கப்பெற்று கழிக்கப் பெறும் அதுபோலவே. பயனற்ற சொற்களைப் பேசிக்கொண்டு, தம்மை உயர்ந்தார் போல—நீதி [illegible]ன்களைப்போலக் கருதிக்கொண்டு-காட்டிக்கொண்டும் சிலர் வாழ்கின்றார்கள். [illegible]ன். பலர் வாழ்கின் [illegible]கள் எனினும் தவறுகாது ஆனாலும், காலம் வருகின்றபோழ்து [illegible]த்தில் தெளிவேற்படும்போழ்து பயனில் சொல் பாராட்டித் திரிந்தவர்களை நாடு ஒதுக்கும்; ஒறுக்கும்.

ஒரு மனிதனின் உள்ளுணர்ச்சி எத்தகையது என்பதை அவனுடைய சொற்கள் காட்டும் நிலத்தின் இயல்பை தண்ணீர் காட்டுவது இயற்கை. அதுபோலவே, உணர்ச்சி, எண்ணம் ஆகியவற்றின் இயல்புகளைச் சொற்களே காட்டும். ''பயனற்ற சொற்களை வழங்குகின்றவன் அறிவுடையவனாகவோ இனிய பண்புடையவனாகவோ இருக்க முடியாது நீதி நெறி வழிப் பட்டவனாகவும் இருக்க முடியாது'', என்று திருவள்ளுவர் கருதுகிறார். பயனில பாரித்து உரைக்கும் உரை நயனிலன் என்பது சொல்லும்— என்று திருக்குறளைக் கொண்டுகூட்டிப் பொருள் சொல்லும்போழ்து, அமுதினும் இனிதாக இருக்கிறது கருத்துச் சுவை. சொல்லும் சொற்களோ பயனற்றவை; அதையும் சுருங்கச் சொல்லுகிறார்களா? உண்ட உணவு செரித்து அடுத்த வேளை பசி தோன்ற வேண்டுமே! அதுவரையில் பேச வேண்டும்; பேசித் தீர்க்க வேண்டும் என்ற உணர்ச்சியோடு தெருவோரத்தில்-திண்ணைகளில் உட்கார்ந்து வம்பு அளப்பவர்களுக்குக் காலத்தின் அருமை தெரியாது! ஆதலால், பயனற்ற சொற்களாக இருந்தும்கூட, விரித்துரைத்து மகிழும் இயல்பு இயற்கையாக இருக்கிறது. இந்த அளவிலேயே திருவள்ளுவர் முடிவு கட்டச் சொல்கின்றார். என்ன முடிவு? பயனற்ற சொற்களைப் பேசித்திரிவோரை அறிவில்லாதவர் என்று கருதி ஒதுக்கு; அல்லது, ஒதுங்கு; இனிமைப் பண்பு இல்லாதவர் என்று கருதி எட்டடி தூரத்தே நிறுத்து; அல்லது நெருங்காதே. நெருங்கினாலும் காது கொடுத்து விடாதே! நீதியற்றவன் என்று கருதி நீண்ட தூரத்தில் காணும்பொழுதே உன்னைக் காப்பாற்றிக்கொள் என்று திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் இக்கருத்து நடைமுறைக்கு வரவில்லை. எல்லார்க்கும் வாய் இருக்கிறது. எல்லாரும் பேசலாம் என்று பேசுகின்றார் பொய்க்குப் புனைந்த வடிவம் கொடுத்து மெய்யாக்குகின்றார்கள். பொழுது போகாதவர்கள், உழைத்து வாழும் அவசியம் இல்லாதவர்கள் தற்பெருமையில் களிக்கும் செல்வந்தர்கள், போக்கிரிகள் இன்றும் பயனில சொற்களைச் சொல்லிக்கொண்டும் கேட்டுக் கொண்டும் இருக்கின்றார்கள். இந்தச் சூழ்நிலையில் எங்ஙனம் மனித குலம் ஆற்றல் நிறைந்த முயற்சிகளில் ஈடுபட முடியும்? எப்படி, அவர்களிடையே நம்பிக்கையுணர்வு வளர முடியும்? சிந்தனை செய்து பாருங்கள். **பயனற்ற சொற்களைப் பேசாதீர்கள்; அது போலவே அவற்றைக் கேட்காதீர்கள்.** இம்முயற்சியால் காலத்தின் அருமை வெளிப்படும். கருத்தில் தெளிவு ஏற்படும். நம்பிக்கை வளரும். நாடு செழிக்கும். மீண்டும் ஒரு தடவை அக்குறட்பாவைப் படித்து, நினைத்து வாழ்க்கைக்கு உரியதாக்கிக்கொள்ள முயற்சி செய்வோமாக!

''நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை''

—அடிகளார்

செய்திச் சுருள்

அம்மன்பேட்டை அருள்நெறி உயர்நிலைப் பள்ளி

“குழந்தைகள் மனம் சுறுசுறுப்பாக இயங்கும் ஆற்றல் பெற்ற ஓர் இயந்திரம் போன்றது—எதையும் துல்லியமாகப் படம் பிடிக்கும் ஆற்றல் மிக்கதொரு காமிரா. எனவே, குழந்தைகளிடத்தில் மிகவும் கவனமாகவும், பொறுப்போடும் பழகவேண்டும். குழந்தைகளுக்கு நல்ல காட்சிகளையும் நல்ல சூழலையுமே உருவாக்கிக் கொடுக்க வேண்டும்” என்று 12-4-65ல் நடைபெற்ற அம்மன்பேட்டை அருள்நெறி உயர்நிலைப்பள்ளியின் ஆண்டு விழாவில் தவத்திரு அடிகளார் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஆண்டுவிழா தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் திரு. அ. மகாலிங்கம் அனைவரையும் வரவேற்றார். இலக்கிய விழா அறிக்கையை தமிழ்ப் பேரவையின் செயலர் திரு. ம. கந்தசாமி படித்தார். பெற்றோர் சங்க அறிக்கையை திரு ஏ. பி. நாராயணசாமி படித்தார். மாவட்ட செய்தித்துறை விளம்பர அதிகாரி திரு. வைகுந்தம் பெற்றோர்களின் கடமை பற்றி விளக்கினார். திரு. அ. இராமமூர்த்தி இலக்கிய விழா, பெற்றோர் சங்க விழா, விளையாட்டு விழா ஆகிய முப்பெரு விழாக்களின் சார்பிலும் சிறப்புரை வழங்கினார்.

இறுதியாக தவத்திரு அடிகளார் அவர்கள் பேசுகையில், உணவுக்கேற்ப உடல் நலம் அடைவது போல, சிந்தனைக்கேற்பவே உள நலம் அமையும். ஆதலின், நற்சிந்தனைகளைத் தூண்டி வளர்க்கத்தக்க நல்ல நூல்களையே மாணவர்கள் தெரிந்தெடுத்துப் படிக்க வேண்டும் என்றார்கள். ‘நீங்கள் நல்ல மனிதராக வளர வேண்டும்—மறந்தும் தீமை நினையாதீர்கள்—எதிரி ஏதாவது தீமை செய்தாலும் அதையும் பொறுத்துக் கொண்டு, உங்கள் அறிவையும் ஆற்றலையும் காப்பாற்ற வேண்டும்’ என்று குறிப்பிட்டார்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்க்கு தவத்திரு அடிகளார் அவர்கள் பரிசுகள் வழங்கினார்கள். திரு அ. மகாலிங்கம் நன்றி கூறினார்.

வள்ளியூர் இலக்கிய மன்றம்

வள்ளியூர் மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளி இலக்கிய மன்றச் சிறப்பு விழா 7-4-65ல் நடைபெற்றது. தவத்திரு அடிகளார் அவர்கள் இலக்கிய மன்றச் சிறப்புப் பேருரை நிகழ்த்தினார்கள். பின்னர், பள்ளிக் கட்டிட நிதிக்காக தவத்திரு அடிகளார் அவர்கள் ரூ 100 நன்கொடை வழங்கினார்கள்.

இலக்கிய மன்றம்

இராசாபுரம் ஸ்ரீ நித்திய கல்யாண சுந்தரி வெள்ளையன் செட்டியார் கழக உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்ற ஆண்டுவிழா 7-4-65ல் தவத்திரு அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வட்டாரத் துணை ஆட்சித் தலைவர் திரு. கு. நெல்லைநாயகம் பி.ஏ. பரிசுகள் வழங்கினார்கள்.

★

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

னலச் சார்பும் இல்லை. நாம் எங்கே அப்படி இருக்கிறோம்? மூளைக் கோளாறுடையவன் கூடச் சில நேரங்களில் பித்தாகத் திரிந்தாலும், காசு கொடுத்தால் வாங்கிக் கொள்ளுகிறானே! பசி வந்தால் சாப்பிடுகிறானே! அவனை எப்படிப் பைத்தியம் என்று சொல்லுவது? அவனுக்கு மூளைநோய் பிடித்திருக்கிறது என்று வேண்டுமானால் சொல்லலாம். இறைவனைத்தான் சுந்தரர் ‘பைத்தியக்காரன்’ என்கிறார். பொதுவாக ஊரில் எல்லாருமே பெரும்பாலும் தத்தமது சொந்தக் காரியங்களையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இறைவன் மட்டும் பிறர் காரியத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறான். என்னங்க அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது - வீடா வாசலா? என்னமோ ஊரு ஊருன்னு சுற்றிக் கொண்டேயிருக்கிறார்’ என்று இன்றும் பலர் கூறுகிறார்கள். குறிப்பிட்ட அந்த நபரின் குறிக்கோளை-உணர்வை நாம் புரிந்து கொள்ள முடியாமலேயே அப்படிக் கூறுகிறோம். நம்முடைய நாட்டில், இறைவன் நம்மை ஆட்கொள்ளுவதற்காகவே இந்த உலகத்திற்கு வருகிறான்—வந்து ஆட்கொள்ளுகிறான். அப்படி அவன் இங்கு வந்து ஆட்கொள்ளுவதற்கும் காரணம் அவனுக்கு இவ்வுலக உயிர் மாட்டுள்ள பேரருட் கருணை தானே தவிர வேறேதுமில்லை.

(தொடரும்)

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் உயர்தர நீதிபதிகளாகவும், படைத்தளபதிகளாகவும் இருந்தனர்; மக்கள் மன்றத்தில் நிறைவேற்றப்படுதற்குச் சட்டங்களைக் கொண்டுவரவும், முதியோர் சபை என்ற செனட்டில் (Senate) உறுப்பினர்களை அமர்த்தவும் கான்சல்கல் அதிகாரம் பெற்றிருந்தனர். இவ்வுயரிய அலுவல்களுக்குப் பட்ரிஷியக் குடிகளே தக்கவரெனக் கருதப்பட்டனர்.

முதியோர் சபை அல்லது செனட் (Senate):

இம்மன்றத்திலும் பிளபியருக்கு இடம் கிடையாது; இதில் ரோம் நகரத்தில் உள்ள எல்லா பட்ரிஷியக் குடும்பத் தொகுதிகளின் (clans) தலைவர்களும் இருந்தனர்: எனவே, இதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 300 ஆகும், முடியாட்சிக் காலத்தில் உறுப்பினர்கள் அரசரால் அமர்த்தப்பட்டனர்; இது அரசருக்கு ஆலோசனை கூறும் மன்றமாக முடியாட்சியில் இருந்தது; குடியரசுக் காலத்திலும் இது கான்சல்களுக்கு ஆலோசனை கூறும் பணியைச் செய்தது. இதனுடைய ஆலோசனையை கான்சல்கள் ஏற்றுக வேண்டுமென்ற கட்டாயம் இல்லாவிட்டாலும், இதன் உறுப்பினர்கள் வாழ்நாள் முழுதும் இதில் இருந்ததாலும், அவர்களில் பலருக்கு ஆட்சித் துறையிலும், அரசியலிலும் அறிவும், அனுபவமும் நிறைய இருந்தனவாகையாலும், இதனுடைய ஆலோசனைக்குக் கான்சல்கள் நடைமுறையில் மதிப்புக்கொடுத்துக் கட்டுப்பட்டே தங்களுடைய அதிகாரங்களைச் செலுத்தினர். பிற்காலத்தில் ரோம் நகரம் தனக்குக் கீழ் ஓர் பெரிய பேரரசை (empire) நிறுவியபோது, இந்த ஆலோசனை மன்றத்துக்கு மிகப் பெரிய ஆட்சி அதிகாரங்களும் நடைமுறை அலுவல்களில் பங்கும் வந்து சேர்ந்தன. இதனுடைய அரசியல் செல்வாக்கு வளர்வதற்கு இன்னொரு காரணம் கான்சல்களே தங்களுடைய ஓராண்டு அலுவற் காலத்துக்குப் பின்னர் இந்த மன்றத்தில் உறுப்பினராகச் சேர்ந்ததுதான். அரசியற் காரியங்களின் மீது இது அளிக்கும் ஆலோசனையை கான்சல் தள்ளிவிடாமல் ஏற்று நிறைவேற்றி வைத்தால், அந்த ஆலோசனையானது மக்களைக் கட்டுப்படுத்தவல்ல ஓர் அரசாங்க ஆணையாகவும் (senatus consultum), ஓர் சட்டத்துக்குரிய ஆற்றலை உடையதாகவும் ஆயிற்று. மேலும் பொதுமக்கள் மன்றமாகிய நூற்றுவர் மன்றத்தில் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு தீர்மானமும் செனட்டின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே ஓர் சட்டத்துக்குரிய ஆற்றலைப் பெற்றது. இது நாளாவட்டத்தில் காரியங்களை ஆய்ந்து முடிவு செய்ததோடு நீதி வழங்குதலிலும் கான்சலுக்கு உதவி செய்து, நிதிகளைக் கட்டுப்படுத்தவும், படைகளைத் திரட்டவும், அயல் நாட்டு உறவுகளை முடிவு செய்வதுமான பல அலுவல்களை ஏற்றுச் செய்தது. ஒவ்வொரு ஆண்டிலும் இதன் உறுப்பினர் பட்டியலைச் சரிபார்த்து, இதில் ஏற்படும் வெறுமையான இடங்களில் கான்சல் புதியவர்களை அமர்த்தினர். இதன் வெற்றிடங்களில், கான்சல் விரும்பினால், பிளபியரை அமர்த்தலாம்; ஆனால் கான்சலே ஓர் பட்ரிஷியராக இருந்ததனால், குடியரசு தோன்றிய முதல் 100 ஆண்டுகளுக்கு செனட்டின் உறுப்பினர் அலுவல் பட்ரிஷியருடைய தனிப்பட்ட உரிமையாகவே இருந்தது.

தொகுதியினர் மன்றம் அல்லது கமிஷியா க்யூரியாட்டா (comitia Curiata):

முடியாட்சியில் முதலில், பொதுமக்கள் மன்றமாக இது ஒன்றுதான் இருந்தது; குடிமக்களாகிய பட்ரிஷியர் தத்தம் குடும்பத் தொகுதியில் (curie or ward) பெரும்பான்மை வாக்குகளால் அரசாங்கக் கேள்வி எதனையும் பற்றிச் செய்த முடிவை அல்லது தீர்மானத்தை ஒட்டி, அந்தக் கேள்வி இந்த மன்றத்தின் முன்பு கொண்டுவரப்பட்டபோது, அதன் மீது முடிவு செய்தனர். பெரும்பாலான குடும்பத் தொகுதிகள் செய்த வாக்குக்கு ஏற்ப, இதில் அளிக்கப்பட்டதால் இதற்கு தொகுதியினர் மன்றம் எனப் பெயர் வந்தது. குடும்பத் தொகுதியினராக அமைந்தவரெல்லாம் பட்ரிஷியர் மட்டுமே; பிளபியருக்குக் குடும்பத் தொகுதி என்ற சமுதாய அமைப்பு இல்லை; எனவே இதுவும் பட்ரிஷியர் மட்டுமே அடங்கிய ஒரு பொது மக்கள் மன்றமாக இருந்தது.

(தொடரும்)

அடிகளார் சுற்றுப்பயணம்



மே, 1965.

7	காலை 10	கைக்குத்தல் சங்கக் கூட்டம்.
	மாலை 5	லேபர் காண்டிராக்ட் சொசைட்டி கூட்டம்.
	இரவு	பிரான்மலையில் ஆதீனம் மண்டகப்படி.
9	மாலை 6	மதுரை கவிமணி மன்றம் ஆண்டுவிழா.
	இரவு 7½	மதுரை திருவாசகத் தொடர் சொற்பொழிவு.

வெளியிடுவோர், ஆசிரியர்: ஆறு. சுப்பிரமணியன், அடிகளார் அச்சகம், குன்றக்குடி இராமநாதபுரமாவட்டம். துணை ஆசிரியர்: சாமி பழனியப்பன்.